*2019 ஜூலை 18]* [திரு. எஸ்.பி. வேலுமணி]

*மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அரசு, கடந்த 2016–2017 முதல் 31–5–2019 வரையிலான மூன்றாண்டு காலத்தில், தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், நபார்டு திட்டம், 14–வது மத்திய நிதிக் குழு மானியம், ஒன்றிய பொது நிதி உள்ளிட்ட பல்வேறு சாலைத் திட்டங்கள் வாயிலாக, இதுவரை 31 கிலோ மீட்டர் நீளமுள்ள 46 சாலைகள், 14 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தார்ச் சாலைகளாக மேம்படுத்தப்பட்டுள்ளன. மேலும், தற்போது அய்யப்பன்தாங்கல், கெருகம்பாக்கம், இரண்டாம் கட்டளை, மூவரசம்பட்டு மற்றும் கவுல்பஜார் ஆகிய ஊரகப் பகுதிகளில் 6.70 கிலோ மீட்டர் நீளமுள்ள 13 சாலைகள், 3 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டு உள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

## (இ) கெயில் நிறுவனம் பெட்ரோலியப் பொருட்களை கர்நாடக மாநிலத்திற்கு எடுத்துச் செல்ல, எண்ணெய்க் குழாய் பதிப்பதற்கு விளைநிலங்களைக் கையகப்படுத்துவதைத் தடுத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.*

**திரு. இரா. இராஜேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கெயில்' நிறுவனம் பல்வேறு எண்ணெய் நிறுவனங்களுக்கு பெட்ரோலியம், தாதுப்பொருட்களை எடுத்துச்செல்ல அனுமதி வழங்குகிறது. தமிழகத்திலே கோவை மாவட்டம், இருகூரிலிருந்து கோவை, திருப்பூர், ஈரோடு, சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்கள் வழியாக கர்நாடக மாநிலம், தேவனகுந்தி பகுதிக்கு 'பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன்' எண்ணெய்க் குழாய் பதிப்பதற்கான முயற்சியை எடுத்து, அதற்காக நிலம் கையகப்படுத்துவதற்கு அரசு அறிவிப்பு வெளியிட்டிருக்கிறது. இந்த நிலையிலே, அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகளும், விவசாயச் சங்கங்களும் போராடுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகளினுடைய வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கின்ற வகையிலே, அரசு மாற்றுவழியைச் செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கர்நாடக மாநிலம், மங்களூரிலிருந்து பெங்களூரு வரை குழாய் பதிக்கின்ற பணிக்கு கர்நாடக அரசு மறுப்பு தெரிவித்திருக்கிறது. எனவே, நம்முடைய அரசும் இதைக்*

கவனத்தில்கொண்டு, மாற்றுவழியை ஏற்பாடு செய்து, அந்த விவசாயிகளுடைய விளைநிலங்களைக் கையகப்படுத்துவதைத் தவிர்ப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, இதற்கு நிபுணர் குழு அமைக்கப்பட்டுள்ளது. நிபுணர் குழுவினுடைய 7-வது கூட்டம் நடைபெற்றுள்ளது. இதில் சாலையோரமாகத்தான் குழாய்களை எடுத்துச்செல்ல வேண்டுமென்று மாநில அரசு சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில், 78 கிலோ மீட்டரை அவர்கள் identify செய்துவிட்டார்கள். மீதியிருக்கின்ற 241 கிலோ மீட்டருக்கு 'கெயில்' நிறுவனம், identify செய்து கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு, அடுத்த கூட்டம் நடைபெறவிருக்கின்றது. பொதுவாக, 'பாரத் பெட்ரோலியம்' கோயம்புத்தூர் மாவட்டம், இருகூரிலிருந்து கர்நாடக மாநிலம், தேவனகுந்தி வரை 312 கிலோ மீட்டர் அளவுக்கு பைப்லைன் போடுவதாக இந்தத் திட்டத்தின்மூலம் முடிவு செய்யப்பட்டது. அதில், இரண்டு பெட்ரோலிய சேமிப்புக் கிடங்குகள் அமைக்கப்படுகின்றன. சேலம் மாவட்டம், சங்கரியில் ஒரு சேமிப்புக் கிடங்கும், இரண்டாவது தருமபுரியில் ஒரு சேமிப்புக் கிடங்கும் அமைக்கப்படுகின்றன. விவசாயிகளினுடைய விளைநிலங்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அரசு மிகக் கவனமாக இருக்கிறது. விவசாயிகளின் நலன் காக்கின்ற அரசாக இந்த அரசு இருக்கின்றது.

அதுமட்டுமல்ல, 5 அடி ஆழத்தில் pipeline fix செய்ய வேண்டும். 5 அடி பள்ளம் தோண்டி, pipeline fix செய்து கொண்டு போகின்ற திட்டம்தான் இந்தத் திட்டம். அதற்கு பிறகு, நிலத்தை அவர்களே சமன் செய்து கொடுக்கின்றோம் என்று சொல்கிறார்கள். சமன்படுத்திக் கொடுத்து, விவசாயிகளினுடைய பயிர் இழப்பீட்டுத் தொகைக்கு, உச்சபட்ச மானியமாக வழங்குகின்ற திட்டம், 2013 ஆம் ஆண்டு மத்திய அரசினுடைய நில எடுப்புச் சட்டத்தின்படிதான் இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்கும் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

*2019 ஜூலை 18]* [*திரு. எம்.சி. சம்பத்*]

*முற்பகல் 11–30*

Pipeline *திட்டம் குறித்து கேரள மாநிலத்தில் ஓர் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. விவசாயிகளுடைய நலனுக்காக வெளியிடப்பட்டுள்ள அரசாணையை எங்களுடைய* Principal Secretary *அவர்கள் ஆய்வு செய்து, அது* better *ஆக இருந்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, பின்னர் அவருடைய ஒப்புதலைப் பெற்றுத்தான் நிறைவேற்றப்படும். பொதுவாகவே,* pipeline *புதைக்கிற விஷயத்தில் இந்த அரசு மிகக் கவனமாக இருக்கிறது. உச்ச நீதிமன்றத்திற்குப் போனது, உயர் நீதிமன்றத்திலிருந்து தீர்ப்பு வந்தது பற்றி உங்களுக்கெல்லாம் தெரியும். அதற்குப் பிறகு நிபுணர் குழு அமைக்கப்பட்டது. நிபுணர் குழுவினுடைய கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது. குழுவினுடைய 7–வது கூட்டத்திலே இந்த முடிவை எடுத்திருக்கிறார்கள்.* Pipeline–*ஐப் புதைக்கின்ற விஷயத்தில், மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களின் அரசு மிகக் கவனமாக இருக்கிறது. விவசாயிகளுடைய நலன் காக்கின்ற அரசு, விவசாயிகளுக்கு எந்தவிதப் பாதிப்பும் இல்லாமல் அந்த நிகழ்வு நடைபெறும் என்பதிலே இந்த அரசு மிகக் கவனமாக இருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மேலும், 2005–ல் ஒரு* pipeline *போட்டிருக்கிறோம். 2008–ல் உங்களுடைய* period-*ல் மணலியிலிருந்து* Airport *வரை ஒரு* pipeline *போட்டிருக்கிறீர்கள். 2010–லே மணலியிலிருந்து சித்தூர், கர்நாடகா மாநிலத்திற்கு ஒரு* pipeline *போட்டிருக்கிறோம். அதெல்லாம் நடந்திருக்கின்றது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்தில்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.* (குறுக்கீடு)

## (ஈ) மனிதக் கழிவுகளை அகற்றும் பணியில் ஈடுபடும் துப்புரவுத் தொழிலாளர்களின் உயிரிழப்பைத் தடுக்க மாற்று ஏற்பாடு செய்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, என்ன சொல்லுங்கள்?* (குறுக்கீடு) *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், சற்று இருங்கள்.*